அருள்மிகு வில்லூன்றிக் கந்தசுவாமி ஆலயம்
(திருக்கோணமலை)



அமரர். திரு.

# துரையப்பா சண்முகநாதன்

அவர்களின்

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்குடா நாட்டின் கந்தர்மடத்தைப்

பிறப்பிடமாகவும்

திருகோணமலையை

வசிப்பிடமாகவும் கொண்ட,

# அமரர். திரு.

# துரையப்பா சண்முகநாதன்

அவர்களின்

# நினைவு மலர்


## 22.07.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு" - குறள்



அன்னை மடியில்
*12.01.1935*

ஆண்டவன் அடியில்
*22.06.2021*

# அமரர்.

# திரு. துரையப்பா சண்முகநாதன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த திதி நிர்ணய வெண்பா
(பூர்வபக்க திரயோதசித் திதி)

## நேரிசை வெண்பா

வண்ணமுற இல்லறத்தை வாழ்வாங்கு வாழ்ந்தபெரும்
சண்முக நாதனெனும் சாத்விகன் - புண்ணியத்தான்
அல்லலின்றி ஆனியெட்டு பூர்வதிர யோதசியில்
வில்லூண்டி யான்தாள் விரைந்து!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பு நிறைந்த பேரொளியாய்
இன்சொற்பேசி,
அறிவுரைகள் பல கூறி,
அன்புடனும், பண்புடனும்,
பாசத்துடனும், நேசத்துடனும்
எம்மைப் பேணிக்காத்து,
அனைவருடனும் இறுதிவரை வாழ்ந்து,
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட

**எங்கள் குடும்பத்தலைவர்**

**அமரர். திரு. துரையப்பா சண்முகநாதன்**

**அவர்களின்**

திருப்பாதக் கமலங்களுக்கு இம்மலரினை
காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**இங்ஙனம்,**
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
பெறாமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் வணக்கம்



சுக்லாம்பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்னவதனம் த்யாயேத்
ஸர்வ விக்னோப சாந்தயே.

மூஷிகவாஹன மோதக ஹஸ்த
சாமரகர்ண விலம்பிக ஸுத்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்னவிநாயக பாதநமஸ்தே.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனிநுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரம்

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியா ழன்வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய
போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய் என்னைக்
கண்டுகொள்ளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே ! உலப்பிலா வொன்றே !
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணு டையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம் பொன் செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே உன்னைத்
தொண்டனேன் இயம்பு மாறிசையே.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டு உள்ளம்
குளிரஎன் கண்கள் குளிர்ந் தனவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகநாயகனை இமையவர்க் கரசை
என் உயிர்க் கமுதினை யெதிரில்
போகநாயகனைப் புயல்வணற்கு அருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா லூர்ந்த
மேகநாயகனை மிகு திருவீழி
மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோகநாயகனை அன்றி மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

இடர்கெடுத் தென்னை யாண்டு கொண் டென்னுள்
இருட்பிழம்பற வெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கினுள் ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதி
அடல் விடைப்பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறியாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று) அருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னுக தில்லை ! வளர்கநம்
பக்தர்கள் ! வஞ்சகர் போய்அகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

ஆரார் வந்தார் ? அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

சொல்லாண் டகரு திப்பொருள்
சோதித்த துதொண்டருள்ளீர் !
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

குழல் ஒலி யாழ் ஒலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழல் ஒலி விண்ணளவும் சென்று விம்பி
மிகு திருவாரூரின்
மழ விடையார்க்கு வழி வழி ஆளாம்
மணஞ் செய் குடிப்பிறந்த
பழ வடியா ரொடுங் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறை சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருள் எலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

பரந்தெழுந்த சமண் முதலாம் பரசமய இருள் நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளி விளங்க
அரந்தை கெடப் புகலியர் கோன் அமுது செயத்
திருமுலைப்பால் சுரந்தளித்த சிவகாம சுந்தரி பூங்கழல்
-போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவு மாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகி
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியாய் நிற்குந் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி.

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பம் ஆம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைமலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பலரிந்தார்.

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

அருவவும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்ற சோதிப்பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும்
கொண்டே ஒரு திரு முருகன் வந்தான் உதித்தனன் உலகமுய்ய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

அருணகிரிநாத சுவாமிகள்

விநாயகர் துதி

தத்தன தனதன தத்தன தனதன
தத்தன தனதன தனதான

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவர்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள் புய மதயானை
மத்தள வயிறனை யுத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே

முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட வெழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

விநாயகர் துதி

உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
எந்தனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துப்பா

வாழி நகரத்தார் வள்ளன்மை மிக்கோர்கள்
ஊழிபலவும் உயர்ந்திருக்க - ஆழிசூழ்
இத்தலத்தில் கோயில் இயற்றினோர் வாழ்கவே
எத்தலமும் போற்ற இனிது.

- திருமுருக கிருபானந்த வாரியார்

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான் தழைத்து ஓங்குக
தெய்வவெண் திருநீறு சிறக்கவே.

ஆறிருதடந்தோள் வாழ்க, அறுமுகம் வாழ்க, வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க, குக்குடம் வாழ்க, செவ்வேள்
ஏறிய மஞ்ஞைவாழ்க, யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க, வாழ்கசீர் அடியார் எல்லாம்.

வான்முகில் வழாது பெய்க !
மலிவளம் சுரக்க ! மன்னன்
கோன்முறை அரசு செய்க !
குறைவிலாது உயிர்கள் வாழ்க !
நான்மறை அறங்கள் ஓங்க !
நற்றவம் வேள்வி மல்க !
மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

அன்னை அன்னை அன்னை அன்னை அம்பிகைக்கு மங்களம்
ஆதிசக்தி அம்பிகைக்கு அனந்தகோடி மங்களம்
என்னுள்ளே விளங்கும் ஈஸ்வரிக்கு மங்களம்
இச்சையாவும் முற்றுவிக்கும் சிற்சிவைக்கு மங்களம்.

தாழ்வில்லாத தன்மையும் தளர்ச்சியற்ற வன்மையும்
வாழ்வினால் பயன்களும் என் வாக்கிலே வரங்களும்
பக்தியிற் கசிந்தலைந்து பாடுகின்ற பான்மையும்
பாடுவோர்க் கனேகபோக பாக்கியங்கள் மேன்மையும்
என்றும் ஓங்க என்கரத் தியற்கையான சித்தியைத்
தந்துஞான மூர்த்தியாய்த் தனித்துவைத்த சக்தியாம்
நாமகீர்த் தனம்பரந்து நாடெல்லாம் செழிக்கவும்
வேறிடாத இன்பம் பொங்கி வீடெல்லாம் விளங்கவும்
ஞானதீப மேற்றியென்றும் நாமகீதம் பாடுவோம்
தர்மசக்தி வாழ்கவென்று சந்ததம்கொண் டாடுவோம்.

சங்கராய சங்கராய சங்கராய மங்களம்
சங்கரீ மனோஹராய சாஸ்வதாய மங்களம்
குருவராய மங்களம் தத்தாத்ரேய மங்களம்
கஜானனாய மங்களம் ஷடானனாய மங்களம்
சாந்த சக்தி மங்களம் சர்வ சக்தி மங்களம்
சீதா ராமா மங்களம் ராதாக்ருஷ்ண மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் ஜெய மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் சுபமங்களம்.

நம பார் வதீ பதயே
அர ஹர மகா தேவா

தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி



இன்பமே சூழ்க
எல்லோரும் வாழ்க.



திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். திரு. துரையப்பா சண்முகநாதன் அவர்களின் வாழ்க்கை வரலாறு

அமரர் திரு சண்முகநாதன் அவர்கள் அமரர்களான திரு திருமதி துரையப்பா கற்பகம் தம்பதிகளின் மூத்த புதல்வராக 12.01.1935 இல் யாழ்ப்பாணத்தின் கந்தர்மடத்தில் பிறந்தார். இளவயதில் தனது தாயாரை இழந்துவிட்டதால் தனது சகோதரர்களான கோபாலசிங்கம் (சின்னச் சண்முகம்), பாலசுப்பிரமணியம் (கிளி), தனபாலசிங்கம் (அப்பர்) ஆகிய சகோதரர்களையும் இராஜராஜேஸ்வரி (ராசாத்தி) எனும் ஒரேயொரு சகோதரியையும் தந்தையோடு சேர்ந்து வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

வண்ணார்பண்ணை யாழ்/ வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியைக் கற்று உயரதரக்கல்வியை பரமேஸ்வராக் கல்லூரியிலும் (தற்போதைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) கற்றவர். தொடர்ந்து படிப்பதற்கான வசதிகள் கிடைக்காததால் தனது பேரனாரான (தாயின் தந்தை) கடற்படைத்தள காவல் அதிகாரியாக பணியாற்றிய பொலிசப்பா என்றழைக்கப்படும் சின்னையா இளையதம்பி அவர்களுடன் திருகோணமலையில் வசிக்கத்தொடங்கினார்.

இக்காலப்பகுதியில் திருகோணமலை தபாற்கந்தோரிலிருந்து மூதூருக்கு தற்காலிகமாக தந்தி கொடுப்பவராக தனது பணியைத்தொடங்கி, பின்னர் தபால் விநியோகம் செய்பவராகவும் பணியாற்றினார். சில ஆண்டுகளுக்கு பின்னர் கொழும்பு - காங்கேசன்துறைக்கான இரவுத் தபால் புகைவண்டியில் தபால் சேகரித்தல் - வழங்குதல் பணியில் கடமைபுரிந்தவர். 1970 இன்பின் நடைபெற்ற தபாலதிபர்களுக்கான தெரிவுப் பரீட்சைக்கு 500 பேர்கள் தோற்றியபோதும் அத்தேர்வில் தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு தமிழ் மொழி மூல தபாலதிபர் அமரர் சண்முகநாதன் அவர்கள்தான். கம்பி இல்லா தந்திச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைக்கான தபாலதிராக கொழும்பிலுள்ள மத்திய தந்திப் பரிவர்த்தனை நிலையதில் (CTO) கடமையைப் பொறுப்பேற்ற இவர் யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, மூதூர், திருகோணமலை ஆகிய பிரதேசங்களிலுள்ள பிரதான தபால் நிலையங்களில் கடமையாற்றி 1995 இல் ஓய்வு பெற்றார்.

1962 இல் அளவெட்டி எனும் பெருங்கிராமத்தின் சிறுபகுதியான குரும்பகலட்டியைச் சேர்ந்த அமரர்களான பஞ்சாட்சரம் கனகம்மா தம்பதிகளின் மகள் அமரர் கமலம் அவர்களைத் திருமணம் செய்து இல்லற வாழ்வில் இனித்திருந்த வேளையில் சசிகரன் (பாஸ்கரன்), இரமணீகரன் (ரவி), கலாதரன் (கலா) எனும் மூன்று ஆண் குழந்தைகளையும்; சசிகலா (சசி), கற்பகசோதி (ராஜி), கௌசல்யா (கௌசி), அகல்யா (அகலி) எனும் நான்கு பெண் குழந்தைகளையும் பெற்றெடுத்தார்.

மூத்த மகன் சசிகரனுக்கு (கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்) தனது சகோதரியான நாகதேவன் (காலஞ்சென்றவர்) இராஜராஜேஸ்வரி தம்பதியினரின் மகளான சகுந்தலாவை (செல்வி) திருமணம் செய்துவைத்து பகீரதன் (பகீரதன் + திவ்யா), பவித்ரா (பிரசாந்தன் + பவித்ரா), ஜான்னவி (ரமீஸ்தர்ஷன் + ஜான்னவி) ஆகிய பேரக்குழந்தைகளையும், அநுவிஷ்வன், கிரிஷிவ் ஆகியப் பூட்டப்பிள்ளைகளையும் பெற்று மகிழ்ந்திருந்தார்.

கனடாவில் வசிக்கும் இராண்டாவது புதல்வன் இரமணீகரனுக்கு (முன்னாள் ஆசிரியர் கல்வியியலாளர் – ஆசிரியர் மத்திய நிலையம், திருகோணமலை) திருகோணமலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நல்லலிங்கம் நாளாயினிதேவி தம்பதியினரின் இளைய மகள் சாந்தினிதேவியை (ஓய்வுபெற்ற ஆசிரியர் - தி/ இ. கி. ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி) திருமணம் செய்துவைத்து தர்ஷிகா, ரிதுஸ்கரன் ஆகிய பேரக்குழந்தைகளையும் பெற்று மகிழ்ந்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸில் வசிக்கும் இளைய மகன் கலாதரனுக்கு (ஓட்டுனர்) திருகோணமலை சாம்பல்தீவு ஆறாம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்வராசா (காலஞ்சென்றவர்) இராசலெட்சுமி தம்பதியினரின் மூத்த மகள் குமுதினியை திருமணம் செய்துவைத்து நந்தகுமார், சற்சொரூபன், ஹாட்சிகா ஆகிய பேரக்குழந்தைகளையும் பெற்று மகிழ்ந்திருந்தார்.

இலண்டனில் வசிக்கும் மூத்த மகள் சசிகலாவுக்கு யாழ்ப்பாணம் பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பாலசூரியமூர்த்தி இராணியம்மா தம்பதியினரின் இளைய மகன் விக்னேஸ்வரனை (சாந்தன் – விற்பனை உதவியாளர்) திருமணம் செய்துவைத்து சாம்பவி (சவி), சயந்தவி, சந்தோஷ் ஆகிய பேரக்குழந்தைகளையும் பெற்று மகிழ்ந்திருந்தார்.

இரண்டாவது புதல்வி கற்பகசோதிக்கு (ராஜி) தலை மன்னாரைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திருமதி. பழனி சரஸ்வதி தம்பதியினரின் மகன் நாகரெத்தினத்தை (பாஸ் - உரிமையாளர் - வில்லூன்றிக் கந்தன் கடை) திருமணம் செய்துவைத்து பாரதப்பிரியா (பாரதி), சதுர்சனன் (சந்துரு), தமயந்தி, செந்தூரன் ஆகிய பேரக்குழந்தைகளையும் பெற்று மகிழ்ந்திருந்தார்.

மூன்றாவது மகளான கௌசல்யாவுக்கு (கௌசி) திருகோணமலையைச் சேர்ந்த திரு. திருமதி. சிவனேசன் சண்முகவதி தம்பதியினரின் மகன் சிவரமணனை (மேற்பார்வையாளர் – டோக்கியோ சீமெந்து தொழிற்சாலை) திருமணம் செய்துவைத்து சஞ்சீவன், கோபிகா, கிருத்திகா ஆகிய பேரக்குழந்தைகளையும் பெற்று மகிழ்ந்திருந்தார்.

இளைய மகள் அகல்யாவுக்கு (முகாமைத்துவ சேவை அலுவலர் - சிரேஷ்ட பொலிஸ் அலுவலகம், திருகோணமலை) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தவராசா (காலஞ்சென்றவர்) குசலகுமாரி தம்பதியினரின் மகன் ஜெயராஜாவை (உரிமையாளர் – ஹலோ மொபைல் வேர்ல்ட்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் செய்துவைத்து அஜய், அவினாஷ், ஆஷினி, ஆருத்ரன் ஆகிய பேரக்குழந்தைகளையும் பெற்று மகிழ்ந்திருந்தார்.

வறுமை நிலையிலும் மகிழ்ச்சியுடன் தனது குழந்தைகளை வளர்த்து, இன்று அவர்கள் அனைவரும் சமூகத்தில் மதிப்புமிக்க பிள்ளைகளாக மிளிர்வதற்கு வழிகாட்டிய உத்தமன்.

"தக்கார் தகவிலர் என்பர் அவரவர் எச்சத்தாற் காணப்படும்" என்ற பொய்யாமொழி புலவரின் குறளுக்கு அமைய வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று வில்லூன்றியான் எக்கடலிலிருந்து எடுக்கப்பட்டாரோ அக்கடலிலேயே தெய்வத்தின் திருப்பாதங்களை தஞ்சம் என்று அடைந்த அமரர் துரையப்பா சண்முகநாதன் அவர்களின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல வில்லூன்றிக் கந்தனை அனைவரும் வேண்டுவோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

## *மகன்களின் இரங்கல்*

லக்கி செவண் என்பதுபோல் உங்களுக்கு நாம் எழுவர்
பிள்ளைகளாய்க் கிடைத்திருந்தோம் - அது
நாங்கள் செய்த புண்ணியம்தான்.
வையத்து வாழ்வதனை நல்ல வண்ணம் வாழவேண்டும்
என்பதனை வலியுறுத்தி அவனியிலே வாழவைத்தீர்.
சொல்லித் தந்த அறிவுரைகள் அன்பான கண்டிப்புகள்
அவ்வப்போது கசந்தாலும் அத்தனையும் எங்களைத்
தரமாக்கச் செய்தவைதான்.
வந்தவர்கள் எல்லோரும் சென்றிடனும் ஓர்நாளில்
சென்றுவிட்டீர் அம்மாவிடம் வில்லூண்டியான் தாழ்சேர.

**மூத்த மகன் சசிகரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையன்பு என்னவென்று அகிலத்தார் நன்கறிவர்
தந்தையன்பு என்னவென்று நான் தந்தையான பின்னறிந்தேன்.
சண்முகத்தார் பயந்தவர்தான் ஏன்? அவர்
தனக்காகப் பயந்ததில்லை - தன்
உற்றவர் உறவினர் பெற்றவர் உள்ளடங்க
உலகத்து ஜீவன்கள் நலமாக இருப்பதற்கே
காலை மாலை வேளைகளில் வில்லூண்டியானிடத்தில்
உங்களுக்கே உரித்தான சுலோகங்களைக் கூறி
வேண்டுதல் செய்வதெல்லாம் எங்களுக்காய் மட்டுமல்ல
அனைத்து ஜீவராசிகளும் அல்லலின்றி வாழத்தான்.
உங்களுக்காய் எம்மிடத்தில் எதனையுமே கேட்டதில்லை
நாங்களாக ஏதும்தந்தால் எதற்கிப்போ என்பீர்கள்
இறுதியாக என்னிடத்தில் "நீ எப்ப வருவாயென"
கேட்டபோது நானும் உங்கே உடன்வரவே முயற்சித்தேன்
ஆனாலும் வருவதற்குள் காலனவன் காரியத்தை
முடித்துவிட்டான் என்ன செய்வேன்
கண்கலங்கி நிற்கின்றேன்.

**அன்பு மகன் இரமணீகரன்**

என் மனதினுள் அம்மாவின் இழப்பு மறைய முன்னரே அப்பாவின் இழப்பு கண்டு என் மனம் வலியில் துடிக்கின்றதே. இளையவனாய் பிறந்த நான் உங்களை நல்லாக்கி பார்க்கவே வெகுதூரம் சென்றேனே. கடைசி வரை உங்களையும் அம்மாவையும் பார்க்க முடியாத துர்பாக்கியசாலி ஆகிவிட்டேனே அப்பா. என் பிறப்பின் சாபமோ அப்பா என்னால் உங்களுக்கான இறுதிக்கடமைகளை செய்ய முடியவில்லையே. அம்மா, அப்பா நீங்கள் இருவரும் பாசத்தின் ஒளி விளக்கே. உங்கள் பாசத்தை எப்பிறவியிலும் நான் அடைய வேண்டும். எந்த யுகத்திலும் தாய், தந்தையின் பாசம் உயர்வானதே. எத்தனை பிறவிகள் எடுத்தாலும் உங்கள் இளையவனாய் நான் பிறக்க வேண்டும் என்று இறைவனிடம் பிரார்த்திக்கின்றேன். அப்பா உங்களுக்கான என் மனக்குமுரலை எல்லாம் வல்ல முருகப் பெருமானிடம் சமர்ப்பிக்கின்றேன்.

**அன்பு மகன் கலாதரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *மகள்களின் இரங்கல்*

அப்பா எங்களை விட்டு நீண்ட தூரம் சென்றுவிட்டீர்கள்!!! சசியம்மா சசியம்மா என்று அழைபீர்களே இனி என்றுதான் அதைக் கேட்பேனோ! அங்காலை இஞ்சாலை போகவிடாமல் பொத்தி பொத்தி வளர்த்தீங்கள். அப்போது உங்கள் மீது கோவம் அடைந்தேன் அப்பா. என்று நான் தாய் ஆனேனோ அன்றுதான் உணர்ந்தேன் அதன் காரணத்தை. அன்று முதல் உங்கள் மீது அன்பும் பாசமும் அதிகம் வைத்தேன். வில்லூண்டியான் வில்லூண்டியான் என்றுதானே உங்கள் மூச்சை விட்டீர்கள். ஆனால், அந்த வில்லூண்டியான் கைவிட்டிட்டானே என்றதை நினைக்க தாங்கமுடியாத வேதனையாக உள்ளது. நீங்கள் அம்மாவிடம் சென்று விட்டீர்கள் என்பதில் சிறு மன அமைதி அடைகின்றேன் அப்பா. நீங்கள் இருவரும் தெய்வங்களாக இருந்து எங்கனை காக்க வேண்டும்.

**மகள் சசிகலா விக்னேஸ்வரன்.**

சிரித்த முகமும் கம்பீரமான தோற்றமும் கனீர் எனும் குரலும் கொண்ட என் தந்தையே தாம் ராஜி அம்மா என்று என்னை கூப்பிடும் சத்தம் இன்னமும் என் செவிகளில் ஒலிந்த வண்ணம் உள்ளதப்பா. நான் பிறக்கும் போது தன் தாய்தான் எனக்கு மகளாகப்பிறந்தால் என்று கூறி உங்கள் அம்மாவின் பெயரையும் எனக்கு கற்பகம் (சோதி) என சூட்டி அன்றே என்னை உங்கள் தாயாக்கினீர்களே. அப்பா உண்மையில் நான் பாக்கியம் பெற்றவள். எங்கள் குடும்பம் அன்பான கூட்டு குடும்பம். என் அம்மாவின் பிரிவிலிருந்து மீள்வதற்குள் நீங்கள் அம்மாவிடம் சென்றுவிட்டீர்களே அப்பா.

நீங்கள் இருவரும் கட்டியெழுப்பிய இந்த கூட்டுக் குடும்பத்தில் இன்று நீங்கள் இருவருமே இல்லையே. அப்பா ஓராண்டு காலத்திற்குள் நீங்கள் இருவரும் எம்மை விட்டு பிரிந்து சென்று விட்டீர்களே. உங்கள் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் அனைவரையும் தவிக்கவீட்டீர்களே அப்பா. இனி உங்கள் பிள்ளைகளுக்காக முருகனிடம் யார் அப்பா கும்பிடுவார்கள். 60 வருட காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் முருகனுக்கு செய்த தொண்டின் பலனோ தம்மை முருகன் தன்னிடம் அழைத்தாரோ. அப்பா உங்கள் ஆத்மா வில்லூன்றி முருகனிடம் சரணாகதியடைய பிரார்த்திக்கின்றேன்.

**அன்பு மகள் கற்பகசோதி (ராஜி)**

அம்மா என்றால் அன்பு! அப்பா என்றால் பலம்!
அன்பை இழந்து தவித்த எமக்கு பலமாக இருந்தவர் நீங்கள்
அம்மாவின் பிரிவு நம்மைவிட
உங்களை வாட்டியதை அறிவேன் அப்பா ஆனால்
இவ்வளவு சீக்கிரம் அம்மாவிடம் நீங்கள்
சென்றுவிடுவீர்கள் என்பதை அறியவில்லையே அப்பா!
எமக்கும் எமது பிள்ளைகளுக்கும் பாதுகாப்பாக இருந்தீர்கள்
சிறிது நேரம் காணவில்லை என்றால்
வாசலிலேயே காத்திருப்பீர்களே
இனி எம்மை தேடுவார் யார் அப்பா?
வெளித்தோற்றத்தில் கண்டிப்பானவராக தெரிந்தாலும்
உண்மையில் இளகிய மனம் கொண்டவர் நீங்கள்
யாரிடமும் எதையும் எதிர்ப்பார்ப்பதுமில்லை
விரும்பி எதையும் கேட்பதுமில்லை
அதனால் என்னம்மோ மனம் ஏங்கித்தவிக்குதப்பா!

சுகயீனமுற்றிருந்த வேளையில் சிறிதும்
ஐயம் தோன்றவில்லையிலே அப்பா!
ஒவ்வொரு நாள் கழியும் போதும்
அப்பா வீடு திரும்புவார் என்று
நம்பியிருந்தோம் ஆனால் ஏமாந்து விட்டோம் அப்பா!
ஒவ்வொரு கணமும் உங்களுக்காக
இறைவனை வேண்டுவதை விட பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகளின் நலனை வேண்டி நிற்பீர்கள்
இனி எமக்காக வேண்டுவார் யாரப்பா
எம்மிரு தெய்வங்களும் எம் வாழ்வில்
வழிக்காட்டியாக ஒளி வீச வேண்டி நிற்கின்றோம்

**அன்பு மகள் கௌசல்யா (கௌசி)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கம்பீரமான தோற்றமும் கனிவான பேச்சும் தாயுள்ளமும் கொண்ட என்னுயிர் தந்தையே! எங்கு சென்றீர்கள் எமைவிட்டு தங்கள் உயிர் பறிக்க கந்தனுடன் காலன் சண்டையிட்டதால் கந்தளாய் கொண்டு சென்று உயிர் பறித்தானோ? உங்கள் அன்பெனும் சிறகுக்குள் எங்களை அடைகாத்து மிகுந்த பாதுகாப்புடனும் அன்புடனும் பண்புடனும் எங்களை வளர்த்தீர்களே! தங்களது இழப்பால் நிர்க்கதியானது போல் தோன்றுகின்றது. அம்மா அப்பா இருவரையும் இழந்து விட்டோமே! எங்கள் பிள்ளைகளை பாசத்துடனும் உரிமையுடனும் அதட்டி வளர்க்க நீங்கள் இல்லையே! நாங்கள் என்ன செய்யப் போகிறோம்? மிகவும் நிறைவான பெற்றோர் நீங்கள். எப்படி வாழவேண்டும் என்று வாழ்ந்து காட்டி பூரணத்துவம் அடைந்த மாமனிதர்கள் நீங்கள். உங்களுக்கு பெற்ற பிள்ளைகள் ஏழு. பெறாத பிள்ளைகள் ஏராளம். வில்லூன்றி கந்தன் அருளால் இல்லறத்தை நல்லறமாக வாழ்ந்து ஓராண்டிற்குள் நற்கதி அடைந்து விட்டீர்கள். நீங்கள் இருவருமே உடலால் எமை விட்டு பிரிந்தாலும் உணர்வால் எம் வாழ்க்கையின் மிகுதிப் பயணத்தில் உங்கள் நினைவுகள் என்றென்றும் தொடரும் தந்தையே.

**அன்பு மகள் அகல்யா**

## *தங்கையின் குமுறல்*

நான் பிறந்தது முதல் தாய் முகம் எதுவென்று அறியாமல் வளர்ந்தேன். எனது தந்தையும் அண்ணன்மார் மூவருமே என்னையும் தம்பியையும் வளர்த்தெடுத்தனர். ஒரே ஒரு பெண்பிள்ளை நான் என்பதை நன்குணர்ந்த எம் பெரியண்ணா தாயில்லா எங்களுக்கு தாயாக இருந்து, அன்புடன் அரவணைத்து வளர்தெடுத்தீரே. எப்படி அண்ணா என்னை தனியே விட்டுச் சென்றீர்கள்? என் கணவரை நான் இழந்து நின்ற போது எனக்கும் என் பிள்ளைகளுக்கும் உறுதுணையாக நின்றீர்களே அண்ணா. என் மக்களுக்கு மாமனார் ஆகிய நீங்கள், அவர்களுக்கு தந்தை போல் அன்பைக் காட்டி தந்தையில்லாக் குறையை மறக்கச் செய்தீர்களே. நான் எங்கிருந்தாலும் "என்ன செய்கிறாய் தங்கச்சி" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்பீர்களே அண்ணா. தந்தை, தாய், சகோதரர்கள் [கோபாலசிங்கம் (சின்னசண்முகம்)], [பாலசுப்ரமணியம் (கிளி)] இறையடி சேர்ந்திருந்தாலும் அனைவருக்கும் ஈடாக நீங்கள்தான் இருந்தீர்கள். ஆனால் இன்று யாருமற்ற பெண்ணாக தனித்து நானும் புலம்புகின்றேன். உங்களது பிரிவினாலே, உங்களது பிள்ளைகள், எந்தனது பிள்ளைகள், மருமக்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் என அனைவரும் ஏங்கித் தவிக்கின்றனர். தங்களின் ஆத்மா வில்லூண்டியானின் திருப்பாதங்களை சென்றடைய வேண்டுமென வேண்டுகிறேன்.

**அன்புத் தங்கை,**
**திருமதி. நாகதேவன் இராஜராஜேஸ்வரி**

## *மருமகனின் இரங்கல்*

என் தாயின் வழியில் தாய் மாமனார் யாரும் இல்லை. அந்த குறையை இல்லாமல் செய்த பெருமைக்குரிய மாமனார் நீங்கள் ஆவீர்கள். மாமி, மாமா நீங்கள் இருவரும் இல்லாத இந்த இல்லம் இன்று வெறிச்சோடி உள்ளதே. உங்கள் இருப்பிடமும் வெற்றிடமாக இருப்பதைக் கண்டு இதயம் வேதனை தீயால் வாடுகின்றதே. மாமி இல்லாத குறையை மாமா நிவர்த்தி செய்வார் என்றும் என் பிள்ளைகளின் நற்காரியங்களை சிறப்பிக்க மாமா உள்ளார் என்றும் மன நிம்மதியுடன் இருந்தேனே சற்றும் எதிர்பாராத திருப்பத்தை எமக்கு தந்தது உமது இழப்பு. உங்கள் பிள்ளைகள் அழுவதைஎன்னால் பார்க்க முடியவில்லை மாமாஎப்பொழுதும் வில்லூன்றியானையே அழைப்பீர்களே. வில்லூன்றியானில் எனக்கு விருப்பத்தை தூண்டியவரும் நீங்களே. உங்கள் வழியே நாங்களும் இனி வில்லூன்றியானை நேசிப்போமே. உங்கள் இறை தொண்டையும் பின் தொடர்வோமே. ஈசன், உமை ஆசியுடன் மாமியின் ஆத்மாவும் உங்கள் ஆத்மாவும் ஒன்றிணைந்து ஆத்மா சாந்தி அடைய வில்லூன்றியானை வேண்டி நிற்கின்றேன்.


**மருமகன் நாகரெத்தினம் (பாஸ்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகளின் இரங்கல்

விதிப் பயன் முடிந்ததோ?
வில்லூன்றியானும் விடை கொடுத்தாரோ?
விண்ணுலகில் ஏன் அன்று மாற்றங்களோ?
நீர் விடைகொடுத்து சென்றதாலே
ஏற்பட்ட அதிசயத் தோற்றங்களோ?
வெயில் சூழ்ந்த காலநிலையிலும்
திடீர் கரு மேகம் சூழ்ந்ததே!
இடைவிடா இடி மின்னல்களும்
உந்தன் துயரத்தில் துடியாய் துடித்ததே!
மக்களின் மனக்குமுறல்களும்
மணல் மணலாய் குவிந்ததே!
பேரப்பிள்ளைகள் எங்களின் மனம்
உங்கள் பிரிவால் பேதலித்துப் போனதே!

**பேரப்பிள்ளைகள் சார்பாக,**
**நா. பாரதப்பிரியா (பிரியா)**



**ஓவியம் வரைந்தவர்,**
**பேரன் நாகரெத்தினம் செந்தூரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *இரங்கற்செய்தி*

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையை பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. துரையப்பா சண்முகநாதன் 12.01.1935 ல் பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை யாழ் பரமேஸ்வராக் கல்லூரியில் கற்றார். பஞ்சாட்சரம் கனகம்மாவின் கனிஷ்ட புதல்வி கமலம் என்பவரை திருமணம் புரிந்து இல்லறத்தை நல்லறமாக நடாத்தி வந்தார். இவருக்கு 7 பிள்ளைகளாகும். சிறந்த பக்திமானும் கடமை உணர்ச்சியும் நேர்மையும் கொண்டவர். தனது உத்தியோகத்தின் நிமித்தம் 1956 இல் திருகோணமலை பிரதான தபாலகத்திற்கு கடமை புரிய வந்தார். அவர் தனது உத்தியோகத்தில் சிறப்பாகவும், நேர்மையாகவும், முழு ஈடுபாட்டுடன் தன்னை அர்ப்பணித்து மக்களுக்கு உதவியதை மக்கள் பாராட்டினர்கள். வில்லூன்றி கந்தசாமி முருகன் மீது அபார பக்தி கொண்டு திருவிழாக் காலங்களிலும், விஷேட உற்சவங்களிலும் தனது சேவையை வழங்குவார். இவருடைய இழப்பானது குடும்பத்தவர்க்கு மட்டுமன்று நாட்டுக்கே பேரிழப்பாகும். அவருடைய ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் வில்லூன்றி கந்தன் ஆகியோர் அருள் புரிவாராக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

**இவ்வண்ணம்,**
**வேதாகமாமணி பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திர குருக்கள்.**
**ஆலய ஆதீனகர்த்தா, பிரதமகுரு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்ணியம் செய்த சண்முகநாதன்

திரு. துரையப்பா சண்முகநாதன் அவர்களின் திடீர் மறைவு எமக்கு வேதனையை தந்தது அண்ணா. உடலில் விழித்தெழாத் துன்பம் அழியாத் துன்பம் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சண்முகம் அண்ணா அவர்கள் எவரிடமும் அன்பாக, பண்பாக, பாசமாக, இன்முகத்துடன் உரையாடும் உத்தமன். சொல்லாமல் கொள்ளாமல் சொர்க்கத்தில் சேர்ந்து விட்டார். வில்லூன்றிக்கந்தனிடம் மிகவும் பயபக்தி உடையவர். ஆலய வளர்ச்சிக்கும், ராஜகோபுரம், தொண்டுகள் செய்வதில் தன்னால் முடிந்தளவு சேவையாற்றியவர். அது மட்டும் அல்லாது ஆலயத்தில் பாரம்பரிய சிவாச்சாரியார்களுடன் மிகவும் பாசமாகவும், அன்பாகவும் பழகியவர். தினமும் தவறாது ஆலயம் சென்று வழிபாடு செய்து எங்களுடன் அன்பாக பேசி இன்புறுவது உண்டு. அண்ணாவின்ங அடக்கம் ஆடம்பரமில்லா வாழ்க்கை நிறைவைக் கொடுத்துள்ளது. அண்ணாரின் பிரிவால் வருந்தும் குடும்பத்தினர் மற்றும் யாவருக்கும் ஆறுதல் கூறி சண்முகப்பெருமான் பாதத்தை வணங்குவோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

இன்பமே சூழ்க.

**இங்ஙனம்**

**சிவஸ்ரீ. சு. சுதாகர குருக்கள்**
**சிவஸ்ரீ. சு. சிவாகர குருக்கள்**
**மற்றும் குடும்பத்தினர்.**
**(வில்லூன்றிக்கந்தசுவாமிஆலயம் பிரதமகுரு. நிர்வாகஸ்தர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தாலும் மறக்க முடியாத மனிதர் அமரர். துரையப்பா சண்முகநாதன்

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தை பிறப்பிடமாகக் கொண்ட அமரர் துரையப்பா சண்முகநாதன் தனது பேரனுடன் திருகோணமலைக்கு வந்து வில்லூன்றிக் கந்தசாமி கோவில் வீதியில் வசித்து வந்தார். இவர் திருகோணமலை பிரதான தபால் கந்தோரில் தபால் அதிபராக பதவி வகித்து ஓய்வு பெற்றவர். வில்லூன்றிக்கந்தன் மேல் அளவற்ற பக்தி கொண்ட அன்னார் ஆலய திருவிழா உட்பட அனைத்து விடயங்களிலும் தன்னை அர்ப்பணித்து இறைபணி ஆற்றியவர் என்றால் மிகையாகாது. ஆலயத்தில் வில்லூன்றியானுக்கு தொண்டு செய்த அடியவர்கள் ஒன்றிணைந்து ஸ்ரீ முருகன் தொண்டர்சபை என்ற அமைப்பை உருவாக்கியபொழுது ஆரம்பகால உறுப்பினராகவிருந்து தலைவர், செயலாளர், பொருளாளர் என்ற பதவிகளை வகித்து சபையின் பணிகள் சிறப்பாக செயற்பட ஊக்குவித்தவர் ஆவார். ஓய்வுபெற்ற பின்பும் தனது ஊருக்குச் செல்லாமல் இறைபணியில் தன்னை முற்றாக ஈடுபத்திக் கொண்டார்.

நான் ஆலய மணியகாரராக நியமிக்கப்பட்டபொழுது ஆலயத்திற்கு செய்யவேண்டிய திருப்பணிகள் ஆலய வளர்ச்சிக்கு தேவையான ஆலோசனைகளையும் அடிக்கடி என்னை சந்தித்து கூறுவார். முக்கியமாக, எனது காலத்தில் வில்லூன்றியானுக்கு இராஜகோபுரம் அமைக்கப்பட வேண்டுமென விருப்பம் கொண்டிருந்தார். அன்னாரின் விருப்பம் போலவே அவரின் காலத்திலேயே வில்லூன்றிக் கந்தனுக்கு இராஜகோபுரம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றது. அண்மையில் தனது துணைவியாரை இழந்ததால் பெரிதும் கவலையுற்றிருந்தார். இறுதிவரை மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், ஆலயகுருமார்கள், அடியார்கள், மணியகாரர்மேல் அளவற்ற பாசம் வைத்திருந்தமையை நாம் அறியக்கூடியதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கும், சுற்றத்தார் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அவரது அமர வாழ்வுக்கும் எல்லாம் வல்ல வில்லூன்றிக் கந்தனைப் பிரார்த்திக்கின்றேன்.

**ஆ. ஆ. ஜெயரட்ணம்,**
**முன்னாள் ஆலய மணியகாரர்**
**வில்லூன்றி கந்தசாமி கோயில், திருகோணமலை**

## *பிறவாப் பேரின்பப் பெருவாழ்வு பெற்றுய்க*

"நெரு நெல் உளனொருவன் இன்றில்லை
என்னும் பெருமை உடைத்திவ்வுலகு "

நேற்று வரை எம்முடன் உறவாடி வாழ்ந்தவர் இன்றில்லை என்ற பெருமையை உடையது இவ்வுலகு. யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் பிறந்து வளர்ந்து கல்வி கற்று அரசசேவையில் நீண்டகாலம் பணியாற்றி ஓய்வுபெற்ற சிறந்த சேவையாளர் எமது மதிப்பிற்குரிய அமரர். துரையப்ப சண்முகநாதன் ஐயா அவர்கள்.

கந்தன் தாள் பணிந்து இறைபணி செய்து வந்த என்னை முதலியார் பரம்பரையினரின் ஏகோபித்த விருப்புடன் அவன் பணி செய்யும் வண்ணம் 25/02/2018 அன்று வில்லூன்றி மணியகாரனாகப் பொறுப்பேற்க வைத்தான். அவ்வாறு பொறுப்பேற்றதும் எங்கள் பரம்பரையின் மணியகாரனாக இருந்த எனது சித்தப்பா அமரர் மயில்வாகனத்தின் பெறாமகன் என்பதை அறிந்து என்னை வாழ்த்தி ஆசி கூறியதுடன் நாம் செய்கின்ற ஆலயப் பணிகளுக்கும் தனது பூரண ஒத்துழைப்பை நல்கிய பெருமகன்.

வில்லூன்றியானின் மீதும் நல்லூரான் மீதும் அதீத பக்தி கொண்டதன் பயனாய் தனது அந்திமகாலம் வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லூன்றியானைச் சுமக்கின்ற பேற்றையும் தரிசிக்கும் பேற்றையும் பெற்றவர். தனது இறுதி யாத்திரையின் முன்னையவாரங்களில்கூட தள்ளாமையையும், முதுமையையும் புறந்தள்ளி சிவகாமிசமேத நடராஜப்பெருமானின் பிரதிஸ்டை பூஜைகளில் கலந்து கொண்ட சிறந்த பக்திமான். ஓய்வூதியம் பெற்றவுடன் முதற்கடமையாக வில்லூன்றியானுக்குரித்தான காணிக்கான குத்தகைப் பணத்தை செலுத்திய பின்னரே தன்னுடைய மற்றைய தேவைகளை நிறைவேற்றும் பண்பாளர். வில்லூன்றியானுக்கு கடன்வைத்துவிட்டு போகக்கூடாது என அடிக்கடி கூறுவார். தன் வழியில் நடக்க தன் குலத்தோன்றல்களையும் செம்மையாக வழி நடாத்தியுள்ளார் என்பது அவர்தம் பிள்ளைகளின் ஆலயப் பணிக்கான செயற்பாடுகளிலிருந்து அறியமுடிகின்றது.

ஆலயத்திற்கு வருகை தரும் பக்த அடியார்கள் மற்றும் குருமார்களுடன் அன்பாகவும், பணிவாகவும் பழகுபவர். ஆலயத்திற்கு தொண்டு செய்வதற்கான நோக்கமொன்றையே கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்ட "ஸ்ரீ முருகன் தொண்டர் சபை"யில் ஆரம்பகால உறுப்பினராக இருந்து தனது இறுதி காலம் வரை தொண்டாற்றியவர். யாரும் எதிர்பாரதவேளை கொரோனா என்கின்ற கொடிய அரக்கனின் கையில் சிக்குண்டு மீளாத்துயில் கொண்டதுதான் யாரும் எதிர்பாராத ஒரு நிகழ்வாகும். அவருடன் பழகிய அனைவருக்கும் இவரது இழப்பு பேரிழப்பாகும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பிறவிப் பெருங்கடலை கடந்த அமரர். துரையப்பா சண்முகநாதன் அவர்களது ஆத்மா சாந்தியடைந்து இறைவனடி சேர்ந்து இன்புற்றிருக்க வில்லூன்றிக் கந்தனை பிரார்த்திப்போமாக.

**மயில்வாகனம் சஹிதரன்,**
**நிர்வாக மணியகாரன்**
**வில்லூன்றி கந்தசாமி கோயில், திருகோணமலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *முருக பக்தரை இழந்து விட்டோம்.*

அமரர். துரையப்பா சண்முகநாதன்

தொண்டுள்ளம் அனைவருக்கும் கிடைப்பதில்லை. அதுவும் சமயப் பணிக்கு தம்மை அர்பணித்தவர்கள் அரிதிலும் அரிது. தன்னுடைய இறுதிக்காலம் வரை வில்லூன்றியானுக்கும், நல்லூரானுக்கும் தொண்டாற்றிய பெருமகன் அமரர். துரையப்பா சண்முகநாதன்.

1982 ஆம் ஆண்டு முதல் இக் குடும்பத்துடன் எனக்கு உறவாட சந்தர்ப்பம் கிடைத்தது. திரு. திருமதி. சண்முகநாதன் குடும்பம் என்னையும் தன் பிள்ளைகளில் ஒருவராக தத்து எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் இல்லத்தில் நடக்கும் விடயங்கள் அனைத்திலும் நானும் தவறாது கலந்து கொள்வேன். இளமைக் காலங்களில் பட்ட துன்பங்களினால் தான் பட்ட வேதனைகளை கமலம் அம்மா என்றும் மறந்ததில்லை. எவர் துன்பப்படுகின்றார்களோ உடனே எந்த விதத்திலும் உணவு, உடை, பணம் கொடுத்து உதவுவதில் அவருக்கு இணை யாருமில்லை. அவரிடம் தாய்மையின் பெருமையினை கண்டு வியந்துள்ளேன். அந்த தாயுள்ளம் திடீரென மறைந்து விட்டது. ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பை தவிர வேறு எதுவும் எம்மால் செய்ய முடியாது.

நான் தொண்டர் சபையின் செயலாளராக (1982) இருந்த காலத்தில் அமரர். து. சண்முகநாதன் ஐயா அவர்கள் உப தலைவராக இருந்து நாம் செய்யும் பணிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தவர். மாலை நேரங்களில் வில்லூன்றியான் ஆலய வாசலில் இருந்து அழுது அழுது பாட்டுகள் பாடுவார். அப்பாடல்கள் 12 ஆம் திருமுறைகளிலும் இல்லை. அவரது மனதில் இருந்து வந்த கவலைகளின் வெளிப்பாடுதான் அப்பாடல்கள். தனக்காகவோ, தனது குடும்பத்துக்காகவோ வேண்டி இறைவனைப் பாடுவதில்லை. அந்த காலம் வன்முறைகள் அதிகரித்த நேரம் தமிழ் மக்களை காப்பாற்ற இறைவனிடம் கேட்பது தான் அவருடைய பிரார்த்தணை இதை நான் அவருக்கு பக்கத்தில் இருந்து அவதானித்துள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ முருகன் தொண்டர் சபையின் ஆரம்பகால உறுப்பினராக இருந்து ஆற்றிய பணிகள் அளப்பரியது. கோணேசர் ஊர்வலத்தை ஸ்ரீ முருகன் தொண்டர் சபை பொறுப்பேற்று நடாத்திய காலத்தில் (1954 முதல் 1968) ஊர்வலத்தில் குலுக்கல் உண்டியல் மூலம் (5சதம்,10சதம்,25 சதம்) கிடைத்த நிதியில் 3000/= வுக்கு கோணேசர் ஆலயத்துக்கு கொடித்தம்பம் அமைத்துக் கொடுத்த பெருமை இவர் தலைமையில் இயங்கிய தொண்டர் சபை உறுப்பினர்களுக்கு உரியதாகும். வில்லூன்றியானுக்கு இராஜகோபுர திருப்பணிச் சபை 2004 ம் ஆண்டு அமைக்கப்பட்டது. திருப்பணிச் சபையில் உப. தலைவராக இருந்து இரவு பகல் பாராது பணி புரிந்தார். அந்த நேரத்தில் ஸ்ரீ முருகன் தொண்டர் சபையில் உப தலைவராகவும் இருந்தார். மண்டபத்தில் தங்குவோரால் கிடைக்கும் பணத்தில் 15% இராஜகோபுரம் கட்டும் பணிக்கு வழங்க வேண்டும் என 2005 தை மாத நிர்வாக சபைக்கூட்டத்தில் திரு. து. சண்முகநாதன் பிரேரணை கொண்டு வந்தார்கள். சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. இவரது முயற்சியால் 3 1/2 லட்சம் ரூபா திருப்பணிச் சபையிடம் கையளிக்கப்பட்டது.

ஸ்ரீ முருகன் தொண்டர் சபையை உருவாக்கிய ஆலய பிரதமகுரு பிரம்ம ஸ்ரீ பூராணந்தேஸ்வரக் குருக்கள், அமரர்கள் பொ. இரத்தினசிங்கம், நா. சி. சுப்ரமணியம், இ. முத்துராசா, செ. பூபாலசிங்கம் , பொ. பத்மநாதன், வி. சிவஞானம், இ. மகாலிங்கம், k. சின்னப்பு, கோ. கிருஷ்ணபிள்ளை, சிவஞானம் (லைட்) ஆகியோர்கள் இறைவனடி சேர்ந்து விட்டார்கள். இறுதியாக எம்மிடம் இருந்த அன்பர் அமரர். து. சண்முகநாதன் அவர்கள் மட்டுமே. அவரையும் வில்லூன்றியான் வரவழைத்துக் கொண்டார்.

கந்தப் பெருமானுக்கு மாலை 5.30 மணிக்கு ஆலய மணி அடிக்கும் போது தன் வீட்டு குத்து விளக்கை ஏற்றி வணங்குவது இவரது கடமையாகும். இவரது வீட்டுக்கு ஒரு நாள் போகா விட்டாலும் "சோதி வரவில்லையா" என்று கேட்கும் அன்புள்ளத்தை இழந்தது என்னால் மறக்க முடியாததொன்று. அம்மா, அப்பா இருவரின் இழப்பும் எதிர்பாராததொன்று. இவ் வெற்றிடத்தை யாராலும் நிரப்ப முடியாது. இவரின் ஆத்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லூன்றி முருகனின் திருவடி நிழலில் நிலைத்திடும் என்பதில் ஐயமில்லை. காலம் விதித்த மரணம் ஒரு முடிவல்ல. அது ஒரு புது உலக வாழ்வுக்கான தொடக்கமும் மாற்றமும் என்பதை ஏற்றுக்கொண்டு அவரது ஆன்மா ஈடேற்றத்திற்காக பிரார்த்திப்பதே அவரை இழந்தவர்களின் துயரத்தில் பங்கு கொள்வதும் ஆறுதல் தெரிவிப்பதாகும்.

**ந. செல்வஜோதி (ஜோதி ஐயா),**
**முன்னாள் கொளரவ செயலாளர்.**
**(ஸ்ரீ முருகன் தொண்டர்சபை வில்லூன்றி)**

## *சண்முகம் அண்ணன்*

என் அன்புத்தோழி கமலா, எங்களை எல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்தி மறைந்த கவலை இன்னும் ஆறவில்லை. ஒரு வருடம் கூட இன்னும் வரவில்லையே; அதற்குள் இடியாக விழுந்தது சண்முக அண்ணனின் மறைவுச்செய்தி.

இன்பத்திலும் துன்பத்திலும் என்றுமே ஒற்றுமையாக, அன்பாக, ஆதரவாக நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை எங்களுக்குத் தெரியும். ஆனால் மண்ணில் மட்டுமல்ல விண்ணிலும் சேர்ந்தே வாழ்வோம் என்று எல்லோருக்கும் சொல்லாமல் சொல்லி விட்டீர்கள். எங்களால் நினைத்துப்பார்க்கவே முடியவில்லை. கமலாவை மட்டும்தான் சிறுவயது முதலே எனக்குத் தெரியும். அவரின் பாசம் சொல்லில் அடங்காதது. திருமணத்தின் பின் தான் உங்களை எனக்குத் தெரியும். ஆனால் நீங்களும் கமலாவைப்போலவே பாசமுள்ள ஒரு அண்ணனாகப் பழகினீர்கள், பேசினீர்கள். கமலாவின் பேச்சை உண்மையாக நம்பி வாழ்ந்தீர்கள் என்பது தெரிகிறது. உங்கள் இருவரின் அருமையான உறவும் புரிகிறது.

இல்லறமே நல்லறமாக வாழ்ந்து நல்லபிள்ளைகளைப்பெற்று வளர்த்து பெருமையுடன் வாழச்செய்தீரகள். எனக்கு எல்லோரோடும் பழக்கமில்லை. மகன் ரமணிகரனோடும், மகள் ராஜியோடு மட்டும் தான் பேசிப்பழகி இருக்கிறேன். உங்களின் நல்வளர்ப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களிடம் பார்க்கிறேன். என்றும் உங்கள் பெயர் விளங்க வாழ்வார்கள். சண்முகம் என்பது பெயரில் மட்டுமல்ல உங்கள் வாயிலிருந்தும் வருவது 'முருகா' என்னும் நாமம் தான். வில்லூன்றிக் கந்தனின் காலடியில் வாழும் பாக்கியம் செய்த நீங்கள் என்றும் 'கந்தன்' காலடியில் வாழ்வீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**என்றும் உங்களின் நினைவோடு,**
**செல்வரத்தினம் மகேஸ்வரி**

## கண்ணீர் காணிக்கை

இறுதி நாட்களில் அவருடன் இருந்த அன்பான உறவு

வயது தளர்ந்திடினும் வார்த்தைகள் தளரவில்லை. அஜெய் என்றும் அவினாஷ் என்றும் ஆஷினி ஆருத்திரன் என்றும் கூவி அழைத்து, 'மகளே!' என்றும் 'ஜெயராஜ் எங்கே?' என்றும் கண்களில் துளிர்த்தன மௌனக்கண்ணீர். செந்தூரா என்று அழைத்தது முருகனைத்தானோ எனத் தெரியாது. பூத்தொடுப்பது போல் கைகள் பிசைகிறது. விளக்கேற்றினீர்களா எனக் கேட்கும் குரல் மறுதலித்துக் கொண்டே இருக்கிறது. காலம் நேரம் வரும்வரை காலன் காத்திருந்தானோ தெரியாது. தீராத நோய் வேளையிலும் தொலைபேசி அழைப்பை யார் எடுத்த வேளையிலும் நான் நல்லா இருக்கேன் ஐயா எனக்கு ஒன்றுமில்லை என ஆறுதல் கூறி அன்பான மொழிபேசி கண் திறக்க முடியாத வேளையிலும் கண்ணீரை தாரை தாரையாக்கி, புண்ணியம் செய்யுங்கோ என்று முணுமுணுக்கும் நாவும் மெல்லென அயர்கிறது. மலர்ந்த மலர் அலர்வதுபோல் அயர்கிறது ஐயாவின் இறுதிமூச்சு. இனிமேல் மீளாத இறுதிமூச்சிலும் கடவுளின் பக்தனாகவே மேல் நோக்கிய மிரட்சியற்ற கனிந்த பார்வையால் ஐயா சண்முகநாதனின் உயிர் பிரிவதை நேராக நின்று கண்டபோது என்செய இறைவிதியைக் கண்ணீரைக் காணிக்கையாக்கி பலதுணிக் கண்ணீரைக் கவலைக்குப் பதிலாக்குகிறேன்.

**முஸ்தப்பா சகாப்தீன்**
ஒய்வு பெற்ற இரண்டாம் மொழி ஆசிரியர்
பேராற்றுவெளி மகாவித்தியாலயம் கந்தளாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை அருள் மிகு வில்லூன்றிக் கந்தசாமி கோவில் வரலாறு




கிழக்கிலங்கையில் பாடல்பெற்ற திருத்தலமாக விளங்குவது திருக்கோணேசர் ஆலயம். சிவனுக்கோர் பழம்பெரும் திருத்தலமாக இவ்வாலயம் மிளிர்வதைப்போல சக்திக்கோர் திருத்தலமாய் திருமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயமும், முருகனுக்கோர் பழம்பெரும் திருத்தலமாக வில்லூன்றிக் கந்தசுவாமி ஆலயமும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்களாக உள்ளன.

சைவக்கோவில்களில் மூலமூர்த்தியாக விளங்குவது சிலை விக்கிரகமே. (கற்களாலான சிற்பம்) ஆனால் வில்லூன்றிக் கந்தசுவாமி கோவிலில் மாத்திரமே பஞ்சலோகத்தில் உருவான வள்ளி தெய்வானை சமேத ஆறுமுகப் பெருமான் மூல மூர்த்தியாக வீற்றிருக்கிறார். சோழர்கால சிற்ப முறையில் அமைந்த பஞ்சலோகத்திலான இவ்ஆலய மூலவிக்கிரகமே உற்சவ காலங்களில் வீதி உலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பது இத்தலத்திற்கே உரித்தான தனித்தன்மைமிக்க அம்சமாகும். பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த அதே ஆகம சாஸ்திர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிப்படியே தினமும் பூசைகளும், திருவிழாக்களும் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு திருவேரகத்தில் வாழ்ந்த சிவசுப்பிரமணியசர்மா என்பவர் தான் வணங்குவதற்கென குமாரநாத சிற்பியை கொண்டு பஞ்சலோகத்தினாலான



சண்முகநாதப் பெருமானை உருவாக்கினார். இதனால் கருணையுற்ற பெருமான் சிவசுப்பிரமணிய சர்மாவுக்கு சாயுச்சிய பதவியை அருளவே கலக்கமுற்ற சுற்றத்தோர் இத்திருவுருவத்தை சிதைத்து விட எண்ணினர். இதன் விளைவால் சண்முகப் பெருமான் தமக்கென ஓர் தலத்தை தேடிப் புறப்பட விரும்பி சிற்பியின் கனவிலே தோன்றி "என்னை இலங்கைக்கு செல்லும் கப்பலில் ஓர் பேழைக்குள் வைத்து அனுப்பி விடு" என்று சொல்லவே சிற்பியும் அவ்வாறே செய்தார். இதன்பின் இச்சண்முகப் பெருமானின் திருவுருவம் திருகோணமலை முடமாண்டான் என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்டது. இதற்கு இரண்டு விதமான வரலாறுகள் உள்ளன.

ஒன்று இலங்கையின் கிழக்குத்திசைநோக்கி வந்து கொண்டிருந்த கப்பல் காற்று இல்லாமையினால் நின்றதாகவும், பின் மாலுமியின் கனவில் தோன்றிய சண்முகப் பெருமான் தான்வந்த பேழையைக் கடலில் வீசிவிடக் கூறியதாகவும், அம்மாலுமி அப்படியே செய்ய கப்பலும் நகர்ந்ததாகவும் சில காலங்களின் பின் கரையூரவர்களின் வலையில் பேழை ஒன்று வந்தாகவும் காலங் காலமாய் ஓர் பூர்விக வரலாறு உண்டு. இன்னுமொரு வரலாறானது பழைய ஓர் ஆணவத்தின்படி ஒல்லாந்தர் காலத்தில் (1762) இத் திருவுருவங்கள் வந்த பேழையைத் திருகோணேமலைக்கு அருகாமையில் வந்த பாய்க்கப்பல் ஒன்று காற்றில்லாமல் நின்றதாகவும் அப்போது சுவான் சம்மட்டியர் சவரியப்பரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது மகனும் படகொன்றில் போய் அரிசி ஏற்றுமதி பண்ணி வந்தபோது அக்கப்பலுக்கு சமீபமாக வந்ததாகவும், அப்பொழுது அந்த கப்பற்காரர்கள் அவர்களை சைகைகாட்டி அழைத்து இவ்வூரின் பெயரை வினவியதாகவும் , இவ்வூரின் பெயர் திருக்கோணமலை என்று கூறியவுடன் வடதேசத்தவர்களில் ஒருவர் இப்பெட்டியை திருக்கோணமலையில் இருக்கும் யாரிடமாவது கொடுக்கும்படி சொன்னதாகக் கூறி இப்பெட்டியை இவர்களிடம் கொடுத்ததாகவும் குறிக்கப்பட்டுள்ளது.

பின்பு அவர்கள் கரைக்குச் சென்று அப்பெட்டியை உடைத்துப் பார்த்தபோது அதில் பஞ்சலோகத்தினாலான ஆறுமுகமுடைய கந்தசுவாமியாரும், இரண்டு அம்மன்களும், வேலாயுதம் ஒன்றும், ஓர் பார்கவதப் பொல்லும், சிவ பூசைப் பொருட்களும், பணமாய் எழுபத்தைந்து இறைசாலும் (எரு) அப்பெட்டியில் காணப்பட்டதாக கூறப்படுகின்றது. அதன் பின் அவ்வூர்க் குருகுலப் பகுதியினரின் அக்காலத்தில் இருந்த சீவலை முதலித்தம்பி எனும் வெள்ளாளப்பிரபுக்கும் ஊர்மணியகாரராக இருந்த ஸ்ரீ. வே. ம. கதிர்காமர் மணியம் அவர்களுக்கும் அறிவிக்க அவர்கள் ஊரவர்கள் எல்லோரையும் அழைத்து ஓர் கூட்டம் வைத்து முடமாண்டான் என்னும் இடத்தில் மகாராஜா மலைக்குச் சமீபமாக சித்திரை மாதம் (சுபானு வருடம்) 1763 ஆம் ஆண்டு அத்திவாரமிட்டு ஸ்தூபி, மண்டபம், தீர்த்தக்கிணறு ஆகியவற்றைக் கட்டி 1765 ஆம் ஆண்டு ஆவணி மாதம் (சர்வசித்து வருடம் கலியுகம் (4867) பார்த்தீப வருடத்தில்) கும்பாபிஷேகம் நடைபெற்று நித்திய பூசைகளும் கிரமமாய் நடைபெற்று ஆவணி மாதத்தில் திருவிழாவும் கொண்டாடப்பட்டது. சுவாமி தீர்த்தம் ஆட, அருகே இருந்த ஒரு சிறிய குளம் தூர்வாரி தீர்த்தக்குளமாக்கப்பட்டது. பின் வே. ம. கதிர்காம மணியம் மூப்படைந்ததால் கோயில் கருமங்களை கொண்டு நடாத்துவதற்கு சுவான் சம்மட்டியாரின் மகன் சவரியப்பர் நியமிக்கப்பட்டார். ஸ்ரீ. வே. ம. கதிர்காம மணியம் இறைவனடி சேர அவரது மகன் க. ம. வேலப்பர் ஊர்மணியகாரராக பட்டங்கட்டப்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் 1782 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களின் யுத்தக் கப்பல்கள் இவ்வூரைத் தாக்கியதால் மக்கள் சிறிது காலம் சிதறி ஓடி அண்டியுள்ள கிராமங்களில் வசித்தார்கள். அமைதி திரும்பியவுடன் தங்கள் இடத்துக்கு வந்து வழமைபோல் காரியங்கள் நடைபெற்றது. ஸ்ரீ சவாரியப்பன் மூப்படைந்த காரணத்தால் தனது சகோதரின் மகன் ஸ்ரீ பெரிய ஆனந்தரை இக்கோயிலை நிர்வாகம் செய்ய எல்லோருடைய சம்மதத்துடன் நியமித்தார். 1782 இல் ஆங்கிலேயர் இவ்வூரைத் திரும்பவும் தாக்க இக்கோயிலும் அழிந்துவிட ஸ்ரீபெரிய ஆனந்தரும் காயமுற்றுப் பின் சிவபதமடைந்தார். ஸ்ரீபெரிய ஆனந்தரின் மகன் ஆனந்தர் வினாசித்தம்பியும், ஊர்மணியம் க. ம. வேலப்பரும் (கதிர்காம மணியத்தின் மகன்) பலரும் இத்திருவுருவத்தை ஓர் பெட்டியில் வைத்து பூட்டித் தம்பலகாமம் திருக்கோணேசர் ஆலயத்தில் பாதுகாப்பாக வைத்தார்கள்.

சிலகாலத்திற்குப்பின் இம் மூர்த்தியைத் தம்பலகாமம் கோணேசர் ஆலயத்தில் பிரதிஸ்டை செய்ய எத்தனித்தும் மூன்று முறையும் தடைப்பட்டது. சில காலம் சென்ற பின் மேற்குறிப்பிட்ட ஸ்ரீ. க. ம. வேலப்பருடைய சொப்பனத்தில் முருகன் தோன்றி தன்னை வில்லூன்றி என்னுமிடத்தில் பிரதிஸ்டை செய்யுமாறு கூறியதாகவும், அவ்வாறே ஸ்ரீ. க. ம. வேலப்பரும் சிவலை முதலித்தம்பியும் சில கரையூரவர்களும் மேற்படி விக்கிரகத்தை வில்லூன்றி எனும் இடத்தில் உள்ள விக்னேஸ்வரர் ஆலயத்தில் வைப்பதாகத் தீர்மானித்து வில்லூன்றியிலேயே பாலப்பசெட்டியார் கட்டுவித்த விக்னேஸ்வர ஆலயத்தில் வைத்தார்கள். சில காலம் சென்ற பின்னர் இந்த ஆலயத்தை விஸ்தீரணமாகக்கட்டி இந்த மூர்த்தியை பிரதான மூர்த்தியாக அதிலமைக்கக் கருதி அதற்கு வேண்டிய நிலத்தை 1809 ஆம் ஆண்டு தை மாதம் 5 ஆம் திகதி இராமநாதஐயர், சிந்தாமணி ஐயர், வைரநாத குருக்கள், முத்தையா சுப்பையா, நாராயண விஸ்வநாத பட்டர் என்னும் நான்கு பிராமணர்களும் தர்ம சாசனம் செய்து கொடுத்தார்கள். இத்தரும சாசனத்திற்கு இப்பிராமணர்கள் நான்கு பேருடைய ஆண் வம்சத்திற்கு இக் கோயில் பூசை உரித்து உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருத்தி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து வழிகாட்டி இன்று எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு 22.06.2021 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர். திரு. துரையப்பா சண்முகநாதன்**

***அவர்களின்***

துயரச்செய்தி அறிந்து நேரில் வந்தும், தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், தகவலைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் மற்றும் இறுதிக் கிரியைகளில் (23/06/2021) கலந்துகொண்டு மயானம்வரை சென்று நல்லடக்க நிகழ்வில் கலந்தும், ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்தும் சிறப்பித்த அனைத்து உற்றார் உறவினர் நண்பர்களுக்கும் குடும்பத்தினர் சார்பாக எமது சிரம்தாழ்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இன்று (22.07.2021) நடைபெற்ற ஆத்ம ஈடேற்ற சபீண்டிகரண கிரியைகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர் நண்பர்களுக்கும்; எமது குடும்பத்தின் சுகதுக்கங்களில் பங்கேற்று பல்வேறு வழிகளிலும் எமக்கு உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும்; மற்றும் மிகக் குறுகியகால அவகாசத்தில் இம்மலரை சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த எஸ் எஸ் டிஜிட்டல் பிரின்டர்ஸ் ஸ்தாபனத்தார்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியினையும் வணக்கத்தினையும் தெரிவித்துக் கொள்கிறோம்.



அன்னாரின்
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org